විශ්‍රාම වැටුප් දෙපාර්තමේන්තුව

ஓய்வூதியத் திணைக்களம்
DEPARTMENT OF PENSIONS

ශ්‍රී ලංකා විශ්‍රාම
இலங்கை ஓய்வு
Sri Lanka Pensions

පරපුරක අභිමානය | தலைமுறையொன்றின் பெருமிதம் | Pride of a Generation

මගේ අංකය / எனது இல. / My No. } ஓய்வூதிய அறிவுறுத்தல் கடித இல: 05/2022

ඔබේ අංකය / உமது இல. / Your No. } ..........................

දිනය / திகதி / Date } 2022.06.28

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாணசபைகளின் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்/ முப்படைத் தளபதிகள்,
பொலிஸ்மா அதிபர்,
மாவட்டச் செயலாளர்கள் மற்றும்
பிரதேச செயலாளர்கள்.

**2017.01.01 ஆம் திகதியின் பின்னர் ஓய்வுபெற்ற அரச அலுவலர்களின் ஓய்வூதியத்தை திருத்தம் செய்தல்**

2016.01.01 ஆம் திகதியின் பின்னர் ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்களின் ஓய்வூதியத்தை மாற்றியமைப்பது தொடர்பாக என்னால் வெளியிடப்பட்ட ஓய்வூதியச் சுற்றறிக்கைகள் 03/2016 மற்றும் 03/2016 (திருத்தம் I) ஆகியவற்றுக்கு மேலதிகமாக இவ் அறிவுறுத்தல்க் கடிதம் வெளியிடப்படுகிறது.

02. தற்போதுள்ள முறைமைகளின்படி ஓய்வூதியத் திணைக்களத்திற்கு திருத்தப்பட்ட விண்ணப்பத்தைப் பரிந்துரைத்த பின்னர், ஓய்வூதியத் திருத்தச் செயல்பாட்டில் ஏற்படும் தாமதங்களைத் தவிர்க்கும் நோக்கில், 2017.01.01 ஆம் திகதிக்குப் பின்னர் ஓய்வுபெற்ற அலுவலர்களின் (பரவலாக்கப்பட்ட) ஓய்வூதியங்களைத் திருத்துவதற்கான விண்ணப்பங்களை அனுப்பும் போது கீழே கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

i. 3/2016 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கையின் பிரகாரம் ஓய்வூதியத்தைத் திருத்துவதற்கான விண்ணப்பம் அந்தந்த நிறுவனத்தால் பரிந்துரைக்கப்படும்போது, ஓய்வூதியத் திணைக்களத்தால் திருத்தப்பட்ட மாதாந்த ஓய்வூதியத்தை கணினியில் இற்றைப்படுத்தி புதிய ஓய்வூதியம் வழங்குதல் ஆரம்பிக்கப்படும். எவ்வாறாயினும், நிலுவைத் தொகையை வழங்குவதற்கான கொடைப்பத்திரம் அந்தந்த நிறுவனத்தால் பிரதேச செயலகத்திற்கு அனுப்பிய பின்னர் AR சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ii. பயங்கரவாதச் செயல்களால் ஊனமுற்ற காவல் துறை அலுவலர்களிற்கு 55 வயதுக்குப் பின்னர் ஊதியத் திருத்தம் செய்ய ஓய்வூதிய மீளாய்வுக்கான விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டால், அவர்களது ஓய்வூதியக் கோவை பெறப்பட்டு மையப்படுத்தப்பட்ட முறையின் கீழ் ஓய்வூதியத் திருத்தம் செய்யப்படும். இந் நோக்கத்திற்காக, இவ் அலுவலரை திருத்திய ஓய்வூதியத்தில் அமர்த்துவது தொடக்கம் உரிய கணக்கீடுகளைச் செய்து நிலுவைத் தொகையை செலுத்துவது வரை அனைத்து பணிகளையும் ஓய்வூதியத் திணைக்களமே மேற்கொள்ளும்.

ஒப்பம்./ஏ.ஜகத் டி.டயஸ்
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்

பிரதிகள்:

1. பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் – த.த.த
2. பணிப்பாளர் நாயகம், முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம் – த.த.த
3. கணக்காய்வாளர் நாயகம் – த.த.த

මාළිගාවත්ත, කොළඹ 10. மாளிகாவத்தை கொழும்பு 10. Maligawatta, Colombo 10.
Hot line: 1970, Direct line: 2209800, Fax: 2342078, Email: info@pensions.gov.lk, Web: www.pensions.gov.lk